வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 17.03.2026 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குழந்தைகளுக்கான பிரதமரின் பிஎம்-போஷன் ஊட்டச்சத்து திட்டம், நாட்டின் மனிதவளத்தை மேம்படுத்தவதில், முக்கிய முதலீடாகவே திகழ்வதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இந்தியாவின் நந்தாதேவி எல்பிஜி டேங்கர் கப்பல், ஹோர்மூஸ் நீரிணைப் பகுதியை பத்திரமாக கடந்த பின்னர், இன்று குஜராத் மாநிலம் வடினார் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 5 மாநில சட்டமன்றத் தேர்தலுக்கு, தேர்தல் ஆணையம் மொத்தம் ஆயிரத்து 111 பார்வையாளர்களை நியமித்துள்ளது.

புதுச்சேரியில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும், தேர்தலுக்கான அடிப்படை வசதிகள் தயார் நிலையில் உள்ளதாக, தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

--------------------------------

முர்மு (11)

குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து நிறைந்த உணவு வழங்குவதற்கான பிரதமரின் பிஎம்-போஷன் திட்டம், நாட்டின் மனிதவளத்தை மேம்படுத்தவதில், முக்கிய முதலீடாகவே திகழ்வதாக, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார். புதுடெல்லியில், அக்க்ஷய பாத்ரா அமைப்பின் சார்பில், இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், தற்போது பிஎம்-போஷன் திட்டத்தினால் பயன்பெறும் குழந்தைகள்தான்,

எதிர்காலத்தில் நாட்டின் வளர்ச்சியை தூண்டுவார்கள் என்றார். பிஎம்-போஷன் திட்டத்தினால், குழந்தைகள் பள்ளியில் சேரும் விகிதம், பள்ளிக்கு வரும் விகிதம், மற்றும், கல்வியை தொடரும் விகிதம், பெருமளவில் அதிகரித்து இருப்பதையும், குழந்தைகளின் கற்றல் திறன் மேம்பட்டு இருப்பதையும், பல்வேறு ஆய்வுகள் நிரூபித்து இருப்பதாக அவர் தெரிவித்தார்.

--------------------------------

*உணவு பதனீடு* (10)

2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், உணவு பதனீட்டுத் துறைக்கு முக்கிய பங்கு இருக்கும் என, இத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சிராஃக் பாஸ்வான் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், நியூட்ரி பாரத் என்னும் ஊட்டச்சத்து மாநாட்டில் உரையாற்றிய அவர், உணவு பதனீட்டுத் துறையில் செயல்படும் நிறுவனங்கள், தரமான, பாதுகாப்பான உணவுப் பொருட்களை மட்டுமே தயாரித்து வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். இதை உறுதிப்படுத்த ஏதுவாக, ஒழுங்குமுறை விதிகளில் சீர்திருத்தம் கொண்டு வந்து, திறம்பட்ட கொள்கைகள் மற்றும் திட்டங்களை அமல்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

--------------------------------

*எல்பிஜி கப்பல்* (9)

கத்தாரில் இருந்து, இந்தியாவிற்கு எல்பிஜி ஏற்றி வந்த நந்தாதேவி எல்பிஜி டேங்கர் கப்பல், போரினால் பாதிக்கப்பட்ட ஹோர்மூஸ் நீரிணைப் பகுதியை பத்திரமாக கடந்த பின்னர், இன்று குஜராத் மாநிலம் வடினார் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது. இக்கப்பலில் உள்ள 46 ஆயிரத்து 500 டன் எல்பிஜி எரிவாயுவை, சிறு கப்பல்களுக்கு மாற்றி, எண்ணூர் மற்றும் ஹால்டியாவிற்கு அனுப்பி வைக்கும் பணிகள், தற்போது நடைபெற்று வருவதாகவும், தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கனவே, மற்றொரு எல்பிஜி டேங்கர் கப்பல், நேற்று குஜராத் மாநிலம் முந்த்ரா துறைமுகத்திற்கு வந்து சேர்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------------

*தேர்தல் பார்வையாளர் 1 (3)*

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 5 மாநில சட்டமன்றத் தேர்தலுக்கு, தேர்தல் ஆணையம் மொத்தம் ஆயிரத்து 111 பார்வையாளர்களை நியமித்துள்ளது. இதுகுறித்து கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

*தேர்தல் பார்வையாளர் 2 (12)*

(வாய்ஸ்)

தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பார்வையாளர்களில், 557 பொதுப் பார்வையாளர்கள், 188 போலீஸ் பார்வையாளர்கள், மற்றும், 366 செலவினப் பார்வையாளர்கள் அடங்குவர். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மட்டும், 17 பொதுப் பார்வையாளர்கள், 4 போலீஸ் பார்வையாளர்கள், மற்றும், 17 செலவினப் பார்வையாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் நாளை முதல், அவரவருக்கு ஒதுக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதியில் தங்கியிருக்க தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது. தொகுதிக்கு வந்து சேர்ந்தவுடன் இவர்கள் தங்களை தொடர்பு கொள்வதற்கான விவரங்களையும், வேட்பாளர்கள், மற்றும், பொது மக்கள், தினசரி எந்த நேரத்தில் தங்களை சந்திக்கலாம் என்பது குறித்த தகவல்களையும் வெளியிடுவார்கள் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------------

*புதுச்சேரி காங்கிரஸ்* (15)

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலையும், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலையும் ஒரே நாளில் சேர்த்து நடத்தக் கோரி, புதுச்சேரி பிரதேஷ் காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. வைத்திலிங்கம், தேர்தல் ஆணையத்திடம் மகஜர் கொடுத்துள்ளார். இருமாநில சட்டமன்றத் தேர்தல்களும் சேர்த்து நடத்தப் படுவதே வழக்கம் என்பதை, அவர் அந்த மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார். வெவ்வேறு நாட்களில் தேர்தல் நடத்துவதால், பிரச்சாரம் என்ற பெயரில் வெளியாட்கள் உட்புகுந்து, கள்ள ஓட்டு, வாக்குப் பதிவிற்கு தடங்கல், மற்றும், சட்டம்-ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படவும் வாய்ப்பு

இருப்பதாக அவர் கூறியுள்ளார். இது அல்லாது, தமிழகத்தில் பணிபுரியும் புதுச்சேரி வாக்காளர்களுக்கு, தேர்தல் நாளில் சம்பளத்துடன் கூடிய விடுப்பு கிடைக்காமல் போகலாம் என்றும், அவர் தெரிவித்துள்ளார். நடப்பு புதுச்சேரி சட்டமன்றத்தின் பதவிக் காலம், வரும் ஜூன் மாதம் இறுதியில்தான் முடிவடைவதால், 5 மாநில சட்டமன்றத் தேர்தலின் முதல் கட்டத்திலேயே, புதுச்சேரியில் தேர்தல் நடத்த வேண்டியதன் அவசியம் என்ன என்றும் திரு. வைத்திலிங்கம் வினவியுள்ளார்.

--------------------------------

*குலோத்துங்கன் (10)*

புதுச்சேரியில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும், தேர்தலுக்கான அடிப்படை வசதிகள் தயார் நிலையில் உள்ளதாக, தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். 78 பறக்கும் படைகள், தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாக, இன்று எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்தார். மாநில எல்லைகளில், 35 இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, வாகன சோதனை நடத்தப்படுவதாக அவர் கூறினார். தேர்தல் விதிமுறை மீறல் குறித்து, பொது மக்கள், இ-விஜில் செயலி மூலம் புகார் தெரிவித்தால் 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். திரு. குலோத்துங்கன் பேட்டியில் இருந்து ஒருபகுதி.....

(வாய்ஸ்-குலோத்துங்கன்)

--------------------------------

*புதுச்சேரி கூட்டம்* (12)

புதுச்சேரியில், தேர்தலுக்கான மாதிரி நடத்தை நெறிமுறைகளின் அமலாக்கம் மற்றும், தேர்தல் செலவினங்கள் குறித்து, மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திரு. குலோத்துங்கன் இன்று, அங்கீகரிக்கப்பட்ட, மற்றும், பதிவு பெற்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு, விளக்கக் கூட்டம் நடத்தினார். மாதிரி நடத்தை நெறிமுறைகள் அமலில் இருக்கும் வரை, அரசியல் கட்சிகள் செய்யத் தகுந்தவை-மற்றும்- செய்யத் தகாதவை குறித்து, இக்கூட்டத்தில் எடுத்துக் கூறுப்பட்டது. தேர்தல் செலவினங்களை, தேர்தல் ஆணைய வழிகாட்டு

விதிமுறைகளின் படி, முறையாக பராமரித்து, செலவுக் கணக்குகளை சமர்ப்பித்தல் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. தேர்தல் நடத்தை நெறிமுறைகள் குறித்து, அரசியல் கட்சி பிரதிநிதிகள் எழுப்பிய சந்தேகங்களுக்கும் அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

--------------------------------

குலோத்துங்கன்-வங்கி (16)

தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள், மற்றும், அரசியல் கட்சிகளின் வங்கிக் கணக்குகளை கையாளுதல், மற்றும், சந்கேத்திற்கு இடமான பணப் பரிவர்த்தனைகளை கண்காணித்தல் குறித்து, புதுச்சேரியில், மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு. குலோத்துங்கன் இன்று, வங்கிகள், மற்றும், நிதி நிறுவனங்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். ஒவ்வொரு வேட்பாளரும், தேர்தல் செலவினங்களுக்கு என வங்கியில் தனி கணக்கு தொடக்க வேண்டும் என்றும், எந்தவொரு வங்கிக் கணக்கிலும், சந்தேகத்திற்கு இடமான பணப் பரிவர்த்தனை நிகழ்ந்தால், அதுகுறித்த விவரங்களை வங்கிகள் மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும் என, கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. வங்கிப் பணத்தை எடுத்துச் செல்லும் வாகனங்களில், பணம் குறித்த ஆவணங்கள் இருக்க வேண்டும் என்றும், வங்கிப் பணம் தவிர, 3ஆம் தரப்பினரின் பணம் எதையும் கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது என்றும், மாவட்ட தேர்தல் அதிகாரி இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார். தேர்தல் விழிப்புணர்வு தொடர்பான சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள், மற்றும், வீடியோக்களை, வங்கிகள், மற்றும், ஏடிஎம்களில் இடம்பெற செய்யவும், அவர் கேட்டுக் கொண்டார்.

--------------------------------

புதுச்சேரி பயிற்சி (8)

புதுச்சேரியில், சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை முறையாக தாக்கல் செய்வது குறித்து, தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களுக்கான பயிற்சி வகுப்பு, மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு. குலோத்துங்கன் முன்னிலையில், இன்று நடைபெற்றது. வழுதாவூர் சாலையில் உள்ள மாவட்ட ஆட்சியர்

அலுவலகத்தின் கலந்தாய்வுக் கூடத்தில் நடைபெற்ற இப்பயிற்சியில், தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள், அவர்களின் முகவர்கள், மற்றும், அரசியல் கட்சி பிரமுகர்கள் உட்பட, சுமார் 100 பேர் கலந்து கொண்டனர்.

--------------------------------

தேர்தல் கீதம் (10)

புதுச்சேரியில், சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் வழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒருபகுதியாக, வாக்காளர் விழிப்புணர்வு கருத்துக்கள் அச்சிடபட்ட பாண்லே பால் பாக்கெட் வினியோகத்தை, மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் இன்று தொடக்கி வைத்தார். பாண்லே நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திரு. வடிவேல் முருகன், மற்றும், பாண்லே முகவர்கள் இதில் கலந்து கொண்டனர். காரைக்காலிலும், தேர்தல் வழிப்புணர்வு கருத்துக்கள் அடங்கிய பால் பாக்கெட் வினியோகத்தை, மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி இஷிதா ராட்டி தொடக்கி வைத்தார்.

இதற்கிடையே, வாக்காளர் கல்வி, மற்றும்,விழிப்புணர்வு குறித்த SVEEP திட்டத்தின் கீழ், மாவட்ட தேர்தல் அலுவலகத்தால் தயாரிக்கப் பட்டுள்ள தேர்தல் கீதம், புதுச்சேரி கடற்கரை சாலையில், இன்று மாலை நடைபெறும் நிகழ்ச்சியில் வெளியிடப் படுகிறது.

--------------------------------

*சேவை வாக்காளர் (9)*

இந்திய ராணுவத்தினர், மற்றும், மத்திய-மாநில ஆயுதப் படைகளில் சொந்த மாநிலத்திற்கு வெளியே பணிபுரிவோர், மற்றும், வெளிநாடுகளில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், சேவை வாக்காளர்களாக, மின்னணுப் பரிமாற்ற முறையில் அஞ்சல் வாக்கு சீட்டு மூலம் வாக்களிக்க, தேர்தல் ஆணையம், தனி வசதி ஒன்றை செயல்படுத்தி வருகிறது. தகுதியுள்ள சேவை வாக்காளர்கள், தேர்தல் ஆணையத்தின் ET-PBMS இணைய தளத்தில் பதிவு பெற்று, இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என, புதுச்சேரி மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

--------------------------------

*முருகன்-நபீன் (8)*

மக்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிஜேபி தலைவர் திரு. நிதின் நபீனுக்கு, மத்திய தகவல்-ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார். புதிய பதவியிலும் திரு. நபீன் தொடர்ந்து வெற்றி பெற தாம் வாழ்த்துவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார். பீகார் சட்டமன்ற உறுப்பினராக, திரு. நபீன் ஏற்கனவே பெற்றுள்ள அனுபவமும், அவரது தலைமைப் பண்பும், மாநிலங்களவையின் அலுவல்களுக்கு பெருமளவில் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

--------------------------------

*ஸ்பீடு போஸ்ட் (10)*

தபால்கள், மற்றும், பார்சல்களின் ஒரே நாள் டெலிவரிக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையிலான இண்டியா போஸ்ட் நிறுவனத்தின் 24 ஸ்பீட் போஸ்ட், மற்றும், 24 ஸ்பீட் பார்சல் சேவைகளை, மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா, இணையமைச்ச்ர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி ஆகியோர் இணைந்து, புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தனர். ஆரம்பத்தில் இந்த வசதி, டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, பெங்களூர், ஹைதராபாத் ஆகிய 6 நகரங்களில் கிடைக்கும் என, அமைச்சர் திரு. சிந்தியா கூறினார். குறுஞ்செய்தி மூலமான ட்ராக்கிங் வசதிகள், ஓடிபி மூலம் பாதுகாப்பான டெலிவரி உள்ளிட்ட பல்வேறு அம்சங்களும் இந்த சேவைகளில் இடம்பெற்றுள்ளன.

--------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குழந்தைகளுக்கான பிரதமரின் பிஎம்-போஷன் ஊட்டச்சத்து திட்டம், நாட்டின் மனிதவளத்தை மேம்படுத்தவதில், முக்கிய முதலீடாகவே திகழ்வதாக, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இந்தியாவின் நந்தாதேவி எல்பிஜி டேங்கர் கப்பல், ஹோர்மூஸ் நீரிணைப் பகுதியை பத்திரமாக கடந்த பின்னர், இன்று குஜராத் மாநிலம் வடினார் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 5 மாநில சட்டமன்றத் தேர்தலுக்கு, தேர்தல் ஆணையம் மொத்தம் ஆயிரத்து 111 பார்வையாளர்களை நியமித்துள்ளது.

புதுச்சேரியில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும், தேர்தலுக்கான அடிப்படை வசதிகள் தயார் நிலையில் உள்ளதாக, தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.